செய்தி வெளியீடு எண்: 038 நாள் : 17.01.2016

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு முழுவதும் 17.01.2016 அன்று 5 வயதிற்குட்பட்ட 70 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க 43051 முகாம்கள், 3000 வாகனங்கள், 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் தகவல்

***********

தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் 17.01.2016 இன்று நாடு முழுவதும் நடைபெற உள்ளது. இதனையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு முழுவதும் ஐந்து வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர், எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனையில் இன்று காலை 7.00 மணிக்கு தொடங்கி வைத்தார்.

முக்கிய அம்சங்கள்

1. சொட்டு மருந்து வழங்கும் மையம் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படும்.
2. அனைத்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் முதல் தவணையாக இன்று 17.01.2016 (ஞாயிற்றுக்கிழமை) சொட்டு மருந்து வழங்கப்படும். இரண்டாம் தவணையாக 21.02.2016 (ஞாயிற்றுக்கிழமை) அன்றும் சொட்டு மருந்து வழங்கப்படும்.
3. தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி ஓரிரு நாட்களுக்கு முன் சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் முகாம் நாட்களில் மீண்டும் சொட்டு மருந்து வழங்கப்பட வேண்டும்.
4. புதிதாக பிறந்த குழந்தைகளுக்கும் (New borns) முகாம் நாட்களில் சொட்டு மருந்து கொடுப்பது அவசியமாகும்.
5. சொட்டு மருந்து வழங்கப்படும் குழந்தைகளுக்கு இடது கை சுண்டு விரலில் மை வைக்கப்படும். இது விடுபட்ட குழந்தைகளைக் கண்டறிய உதவுகிறது.
6. முகாம் நாளன்று போலியோ சொட்டு மருந்து வழங்க தனியார் மருத்துவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.
7. இடம் பெயர்ந்து வாழும் தொழிலார்களின் குழந்தைகளுக்கும் முகாம் நாளான்று போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும்.

**மாண்புமிகு முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா** அவர்களின் சீரிய தலைமையில் தமிழ்நாடு போலியோ இல்லாத நிலையை அடைந்துள்ளது. இந்த நிலையை தக்க வைத்துக்கொள்ளவும், குழந்தைகளை போலியோ வைரஸ் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதும் மிகவும் இன்றியமையாததாகும். எனவே, அனைத்து தாய்மார்களும் இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் டாக்டர்.ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டாக்டர்.க.குழந்தைசாமி, மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர்.ஆர்.விமலா, மருத்துவப் பணி மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (பொறுப்பு) டாக்டர்.எஸ்.மணி, இணை இயக்குநர் (தடுப்பூசி) டாக்டர்.சி.சேகர், டாக்டர்.சுந்தரி, இயக்குநர், குழந்தைகள் நல மருத்துவமனை, உலக சுகாதார நிறுவனத்தின் திட்ட கண்காணிப்பு மருத்துவர் டாக்டர்.கே.சுரேந்திரன் மற்றும் மருத்துவத் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**